**OS No.181/2015**

**DW–1 –சித்ரா**

**த/பெ.**

**நாள். 09.02.2026**

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1.பிவாசாஆ–2 ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால்ஆமாம். அசல் உயிலை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் போலி உயில் இருப்பது தெரிந்துவிடும் என்பதால் தான் அசல் உயிலை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதை அசல் உயிலை அடமானத்தில் வைத்துள்ளேன். பிவாசாஆ–2 ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் தேதியன்று எனது தகப்பனார் படுத்த படுக்கையாக சுய நினைவு இல்லாமல் உடல் நலம் குன்றி இருந்தார் என்று சொன்னால் சரியல்ல நன்றாகத் தான் இருந்தார்.

2. உயில் எழுதியது பேப்பர் வாங்கியது பதிவு செய்தது எல்லாம் ஒரே தேதியில் தானா என்று கேட்டால் இல்லை எல்லாம் வெவ்வேறு தேதியில் நடந்தவை. உயில் எத்தனை ரூபாய் பேப்பரில் எழுதப்பட்டது என்றால் அது வெறும் தாளில் தான் எழுதப்பட்டு இருந்தது. நான் உயிலில் கையெழுத்துப் போட்டு இருக்கிறேனா என்று கேட்டால் போட்டு இருக்கிறேன் ரேகை வைத்தேனா என்று ஞாபகம் இல்லை.

3.உயிலில் இருக்கும் என்னுடைய விலாசத்தை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நான் தான் எழுதினேன். மற்ற சாட்சிகளின் விலாசத்தை ராஜு மற்றும் மோகன் சுந்தர் மற்றும் மகாலிங்கம் எழுதினார்கள். என்னுடைய அப்பா வீட்டில் வைத்து எழுதினார்கள். பதிவாளர் முன்னிலையில் தான் சாட்சிகள் அவர்களுடைய விலாசத்தை எழுதினார்கள். பதிவாளர்

முன்னிலையில் தான் சையத் அன்சாரி என்பவர் கையெழுத்து செய்தாரா என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.

4. சையது அன்சாரி எத்தனை கையெழுத்துக்கள் செய்தார் என்றும் ஞாபகம் இல்லை. மகாலிங்கம் எத்தனை கையெழுத்துக்கள் செய்தார் என்றும் ஞாபகம் இல்லை. ராஜா என்ற நபர் எத்தனை கையெழுத்துக்கள் போட்டார் என்றும் எனக்கு ஞாபகம் இல்லை. மோகன் சுந்தர் என்ற நபரும் எத்தனை கையெழுத்துக்கள் போட்டார் என்று ஞாபகம் இல்லை. பதிவாளர் எல்லா பக்கங்களிலும் கையெழுத்து செய்தாரா என்றும் எனக்கு ஞாபகம் இல்லை .

5. என் அப்பாவின் விலாசத்தை யார் எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை நீதிமன்றத்தின் முன் அனுமதி வாங்காமல் நான் தாக்கல் செய்திருக்கும் இந்த செகண்டரி ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் இந்த உயில் போலியானது என்று சொன்னால் சரியல்ல.

6.**பிவாசாஆ–4** அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம் . கமலம் என்று போடப்பட்டிருக்கும் கையெழுத்து என் தாயாரின் கையெழுத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. என் தாயாருக்கு **பிவாசாஆ–4** ஆவணம் எழுதி வைக்க எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. **பிவாசாஆ–4** நடைமுறைக்கு வந்ததா அல்லது நடைமுறையில் இருக்கிறதா என்று கேட்டால் நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன் மேலும் தனி சுவாதீனத்திலும் இருக்கிறேன் .

7.**பிவாசாஆ–4 ல்** குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்திற்கு வாடகை பத்திரம் அதாவது நான் வாடகைக்கு விட்டு இருக்கும் பத்திரம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்று கேட்டால் வீட்டில் வைத்திருக்கிறேன் . பிவாசாஆ–7, 8, 9, 10, 11, 12 ஆகிய ஆவணங்கள் வழக்குக்கு பின்னிட்டவை என்று

சொன்னால் இருக்கலாம். அதற்கு முன்னால் இருக்கும் ஆவணங்களும் தாக்கல் செய்திருக்கிறேன். **பிவாசாஆ–13** கமலம் என் அம்மாவின் மருத்துவ குறிப்புகள் தாக்கல் செய்ததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதேனும் இருக்கிறதா என்றால் என் அம்மாவை நான்தான் கடைசி வரை பார்த்துக் கொண்டிருந்தேன் அதனால் மருத்துவ குறிப்புகள் தாக்கல் செய்திருக்கிறேன்.

8.**பிவாசாஆ–13** என் தாயாரின் மருத்துவக் குறிப்புகள் என் தாயார் வீட்டில் இருந்தவை என்றும் அவற்றை வாதிகளுக்குத் தெரியாமல் நான் எடுத்து வந்து விட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் **பிவாசாஆ–13** ஆவணத்திலேயே என் தாயார் சுயநினைவாற்றுப் போயிருந்தார் என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. **பிவாசாஆ–4** எழுதப்பட்டு இருக்கும் சமயத்தில் என் தாயார் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

10. **பிவாசாஆ–14** 2021 ஆம் ஆண்டு பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல அது வாதிக்கு தெரியாமல் பெறப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல . பட்டா வழங்குவதற்கு முன்பு வருவாய்த் துறையினர் விசாரணை செய்தார்களா என்றும் கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. **பிவாசாஆ–4** ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டு இருக்கும் நபர்கள் யார் என்று கேட்டால் என் அப்பாவிற்கு சொந்தக்காரர்கள் நான் சிறு வயது இருக்கும் போது எனக்கு தெரியும். **பிவாசாஆ–2** மற்றும் **பிவாசாஆ–4** ஆகியவற்றின் சாட்சிகள் எனக்குத் தெரிந்த நபர்கள் என்றும் என்னுடைய கை ஆட்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கு பங்கு கிடைக்கக் கூடாது என்பதற்காக போலியான உயில் தயாரித்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல வாதிகள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல .

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.